# முஸாபகது ரமழான் போட்டி முடிவுகளும் விபரங்களும்.

அளவற்ற அருளாளன் நிகரில்லா அன்புடையோன் அல்லாஹ்வின் பேரருளால் ரியாதிலுள்ள தமிழ் த஼வா ஒன்றியம், கொழும்பிலுள்ள World Cultural Center for Development and Training நிலையத்தின் அனுசரணையுடன் சென்ற ரமழான் மாதம் சர்வதேச ரீதியில் முஸாபகது ரமழான் போட்டியை நடாத்தியமை யாவரும் அறிந்ததே.

ஸவுதி அரேபியாவிலுள்ள நாலாபுரங்களிலிருந்தும், இலங்கை, இந்தியா, கட்டார், டுபாய், பெல்ஜியம் என பிற நாடுகளிலிருந்தும் ஏராளமான சகோதர சகோதரிகள் விடைகளை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. போட்டியில் வெற்றிபெறுவதும், வெற்றி பெறத் தவறுவதும் சகஜமே. போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு நீங்கள் தொடர்ந்தும் இஸ்லாத்தைத் தூய வடிவில் அறிவதற்காக அல் குர்ஆனை, ஹதீஸ் நூற்களை, நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அனு தினமும் வாசிக்க வேண்டுகின்றோம்.

மார்க்க விடயங்களில் தெளிவை ஏற்படுத்தும் நோக்கமே இப்போட்டியின் கருப்பொருளாகும்.

எந்தப் போட்டியாயினும் அதன் விதிகளைப் பேனுவதே மரியாதையும், ஒழுங்குமாகும். நிபந்தனையில் குறிப்பிட அவசியமற்றதாக இருப்பினும் "மற்றவர் எழுதியதைப் பிரதி பன்னல் இஸ்லாத்தில் மோசடியும், பிற போட்டியாளர்களுக்குச் செய்யும் துரோகமுமாகும்" எனத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தமைக்கான காரணம் அவ்வாறு தவறான வழிகளில் எழுதி பரிசுகளைப் பெறுவது ஹராம் என்பதாலும், சிரமப்பட்டு முறையாக எழுதிய வேறொருவர் பெற வேண்டிய பரிசை தாம் பெறுவதை விட அல்லாஹ்வின் தண்டனை மிகக் கடுமையானது என்பதாலுமே. அதன் விபரீதத்தை அறியாது அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை கண்டறியப்பட்ட சில போட்டியாளர்களின் புள்ளிகள் குறைக்கப்பட்டதில் அவர்கள் பரிசு பெறும் தகுதியை இழந்தமை இங்கு சுட்டிக்காட்டப்படுவது பொருத்தமாகும்.

இப்போட்டியின் வினாக்களை வெளியிடுவதிலும், விளம்பரப்படுத்துவதிலும் பாரிய பங்காற்றிய ஜப்னா முஸ்லிம் இணைய தள உறுப்பினர்களுக்கு தமிழ் த஼வா ஒன்றிய உறுப்பினர்களான மௌலவிமார் சார்பாகப் பூரண நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, எமது த஼வாப் பயணத்தைத் தொடர அவர்கள் எமக்கு தொடர்ந்தும் கைகொடுப்பார்கள் என ஆதரவு வைக்கின்றோம். மக்களின் நன்மதிப்பைப் பெற்ற அவர்களின் சேவை தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மேலும், எமது வினாக்களை வெளியிட்ட இஸ்லாம்கல்வி.காம் மற்றும் காத்தான்குடி.இன்போ இணைய தள உறுப்பினர்களுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அல்லாஹ் அனைவரின் சேவையையும் ஏற்று ஈருலகிலும் வெற்றியைத் தருவானாக.

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட சில முக்கிய வினாக்களும் அவற்றுக்கான பதில்களும்.

## அல்குர்ஆன் பகுதி:

**சுருக்க விடை:**

**வினா இல. 05:** ஸூரா ஸுமர் 67 ஆம் வசனத்திலுள்ள அல்லாஹ்வின் பண்பு?

**விடை:** அல்லாஹ்வின் வலக்கரம்

**வினா இல. 10:** "ஹமீம்" என்ற பதத்தின் பொருள்.

**விடை:** 1. மிக நேசத்துக்குரிய 2. அதி கொதிக்கக்கூடிய

## ஸஹீஹுல் புகாரி

**சுருக்க விடை:**

**வினா இல. 07:** ஹதீஸை அறிவிக்கும் ஸஹாபியின் பெயர் யாது? **விடை:** அபூ பக்ரா (ரழி)

**வினா இல. 10:** வுழூவின்போது ஒரு தடவை மட்டுமே தலை முழுவதையும் நீரால் தடவ வேண்டும் என இடம்பெற்றுள்ள ஹதீஸ்களின் அறிவிப்பாளர்கள்?

**விடை:** இப்னு அப்பாஸ் (ரழி), உஸ்மான் இப்னு அப்பான் (ரழி), அப்துல்லாஹ் இப்னு ஸைத் (ரழி).

**வினா இல. 12:** கிப்லாவை முன்னோக்கியோ, பின்னோக்கியோ மலஜலம் கழிக்க முடியுமா ஒரே ஒரு சந்தர்ப்பம். **விடை:** திரை இருந்தால்.

## நபி (ஸல்) அவர்களின் சரித்திரம்

**சுருக்க விடை:**

**வினா இல.: 04** முதன் முதலில் நபியவர்களுக்குப் பாலூட்டியவர் யார்?

**விடை:** அவர்களின் தாய் ஆமினா.

**வினா இல.: 08** நபியவர்களுக்குப் பின் மரணித்த அவர்களின் மகள்மார்?

**விடை:** பாத்திமா (ரழி) அவர்கள் மாத்திரமே.

**சரி, பிழை அடையாளமிடுக**

**வினா இல.: 12 (1)** அரேபியர்கள் நபியவர்களுக்கு முன்பிருந்தே கத்னா முறையை அறிந்திருந்தார்கள். **(சரி)**

**வினா இல.: 12 (2)** அரேபியர்களின் வழக்கப்படியே நபி (ஸல்) அவர்களுக்கு கத்னா செய்யப்பட்டது. **(சரி)**

## பொது வினாக்கள்

### சுருக்க விடை:

**வினா இல.: 04.** மக்களிடம் நடைமுறையில் விஷேசமாகக் காணப்படும் ஒரு செயலை நபி (ஸல்) அவர்கள் தடுத்துவிட்டு, "அது எந்த நலவையும் கொண்டுவரப்போவதில்லை, அது உலோபியிடமுள்ளதை வெளியேற்றுவது மாத்திரம் தான்" எனக் கூறினார்கள். அச்செயல் யாது?

**விடை:** நேர்ச்சை (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

**வினா இல.: 06.** தொழுகையை ஆரம்பிக்கும் போது "உஸல்லீ பர்ள...." எனவும், நோன்பு நோற்கும்போது "நவய்து ஸவ்மகதின்...." எனவும் நிய்யத்தை நாவினால் மொழிவது பித்அத்தாகுமா?

**விடை:** ஆம். நபியவர்கள் அவ்வாறு செய்யவோ, செய்யுமாறு கூறவோ இல்லை.

**வினா இல.: 09.** "அறியாமைக் கால நான்கு விடயங்கள் எனது சமூகத்தாரிடம் உள்ளன. அவர்கள் அவற்றை விடுவதில்லை" என நபியவர்கள் கூறிய நான்கு விடயங்கள்.

**விடை:** பிறர் வம்சத்தைக் குறை கூறல், குலப் பெருமை பாராட்டுதல், நட்சத்திரங்களைக் காரணமாக வைத்து மழை பெய்யும் என நம்புதல், ஒப்பாரி வைத்து அழுதல்.

### சரி, பிழை அடையாளமிடுக

**வினா இல.: 12 (1)** வுழூச் செய்யும்போது நபி (ஸல்) அவர்கள் ஒருபோதும் தலையின் சில பகுதியை மாத்திரம் மஸ்ஹ் செய்யவில்லை. **(சரி)** எனவே, முழுத் தலையையும் மஸ்ஹ் செய்வது கடமையாகும்.

**வினா இல.: 12 (2)** நள்ளிரவில் மாதவிடாயிலிருந்து தூய்மையான பெண் உடனடியாகக் குளித்து இஷாத் தொழுகையை நிறைவேற்றுவது கடமை. **(சரி)** மாறாக காலையில் குளித்து தொழுகைகளை வீணாக்குவது பெரும்பாவமாகும்.

**வினா இல.: 12 (3)** நபி (ஸல்) அவர்கள் பஜ்ரின் முன் ஸுன்னத், வித்ர் ஆகிய தொழுகைகளை வழமையாகத் தொழுதுவரவில்லை. **(பிழை)** நபியவர்கள் பயணங்களிலும் விடாமல் தொழுத மிக முக்கியமான இவ்விரு ஸுன்னத்தான தொழுகைகளையும் அதிகமானோர் தொழுவதில்லை.

போட்டியின் பரிசளிப்பு விழாவும், ரியாத் வாழ் தமிழ் பேசும் குடும்பங்களுக்கான மாதாந்த தஃவா நிகழ்ச்சியும் நேற்று (13) வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகை முதல் இரவு 7.00 மணி வரை வெகு சிறப்பாக நடைபெற்றது.

குத்பாப் பேருரையுடன் ஆரம்பமான எமது தஃவா நிகழ்ச்சிகள், இஸ்லாத்துக்காக ஆழமான சேவைகளைச் செய்த இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து சில துளிகள், அல்குர்ஆன் தப்ஸீர் விளக்கம், பித்னாக்கள் எனும் குழப்பங்களும், இன்றைய முஸ்லிம்களும் என பல்வேறு தலைப்புக்களில் உரைகள் நிகழ்த்தப்பட்டதோடு சிறுவர்களுக்கான, பெண்களுக்கான, யுவதிகளுக்கான தனித்தனி நிகழ்ச்சிகளும், கேள்வி, பதில் நிகழ்ச்சிகளும் நடைபெற்று வெற்றியீட்டியவர்களுக்காக பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கவை.

## வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம்

| இல | பெயர் | ஊர் / நாடு | புள்ளிகள் | பரிசு | |
|---|---|---|---|---|---|
| 1 | S.Abdur Raheem | Riyadh | 98 | 1200 | ஸ. ரியால் |
| 2 | A.K.F.Mazeena | Weligama | 97.5 | 33000 | இல.ரூபா |
| 3 | Fareena Amanullah | Riyadh | 97 | 800 | ஸ. ரியால் |
| 4 | H.Jarjees Ahmed | Riyadh | 96 | 600 | ஸ. ரியால் |
| 5 | M.M.F.Fasna | Galle | 95 | 13000 | இல.ரூபா |
| 6 | Fathima Fainas | Kal-Eliya | 95 | 10000 | இல.ரூபா |
| 7 | Mumthaj Begum | India | 94.5 | 3200 | இந்.ரூபா |
| 8 | M.F.F.Nifha | Weligama | 94.5 | 5000 | இல.ரூபா |
| 9 | Ummu Maryam | Galle | 94 | 3500 | இல.ரூபா |
| 10 | Ummu Hammoodh | Galle | 94 | 3500 | இல.ரூபா |
| 11 | Noorul Nafasa | Ehaliyagoda | 94 | 3500 | இல.ரூபா |
| 12 | M.Jalaldeen Ibrahim | Riyadh | 94 | 100 | ஸ. ரியால் |
| 13 | M.H.A.Wafa | Kandy | 94 | 3500 | இல.ரூபா |
| 14 | H.Salma Riyas | Riyadh | 94 | 100 | ஸ. ரியால் |
| 15 | Fathima Sumaiya | Hufuf | 94 | 100 | ஸ. ரியால் |
| 16 | S.M.Azeem | Rakwana | 93 | 3500 | இல.ரூபா |
| 17 | Ummu Hamna | Galle | 92.5 | 3500 | இல.ரூபா |
| 18 | Mohamed Hasan | Riyadh | 92.5 | 100 | ஸ. ரியால் |
| 19 | M.S.M.Rilwan | Weligama | 92.5 | 3500 | இல.ரூபா |
| 20 | M.F.M.Shilmy | kattankudy -05 | 92.5 | 3500 | இல.ரூபா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | Sheikh Fareed Musthafa | Riyadh | 92 | 100 | ஸ. ரியால் |
| 22 | N.A.Seyyid Ali | Dubai - U.A.E. | 92 | 100 | ஸ. ரியால் |
| 23 | M.M.F.Rizniya | Weligama | 92 | 3500 | இல.ரூபா |
| 24 | I.M.Fathima | kattankudy -03 | 92 | 3500 | இல.ரூபா |
| 25 | I.Abdur Razack | India | 92 | 1600 | இந்.ரூபா |
| 26 | F.Zulhiya M.Ifham | Negombo | 92 | 3500 | இல.ரூபா |
| 27 | Anver Hussain | Galle | 92 | 3500 | இல.ரூபா |
| 28 | Minnathun Nisa | Al Khobar | 91.5 | 100 | ஸ. ரியால் |
| 29 | M.R.Fowziya Sultan | Wellampitiya | 91.5 | 3500 | இல.ரூபா |
| 30 | M.H.M.Thasneem | Ehaliyagoda | 91.5 | 3500 | இல.ரூபா |
| 31 | Fathima Shahrin | Taif | 91.5 | 100 | ஸ. ரியால் |
| 32 | A.S.Hidayathullah | Riyadh | 91.5 | 100 | ஸ. ரியால் |
| 33 | Sithy Sameena Zubair | Riyadh | 91 | 100 | ஸ. ரியால் |
| 34 | Niroshiya M.Auff | Riyadh | 91 | 100 | ஸ. ரியால் |
| 35 | Mohamed Ali | Riyadh | 91 | 100 | ஸ. ரியால் |
| 36 | M.N.M.Shakir | Kalmunai | 91 | 3500 | இல.ரூபா |
| 37 | Kanzul Misba | Weligama | 91 | 3500 | இல.ரூபா |
| 38 | Jahan Mazahir | Riyadh | 91 | 100 | ஸ. ரியால் |
| 39 | Abdur Rauf Mohamed | Qatar | 91 | 100 | ஸ. ரியால் |
| 40 | A.Mohamed Yasir | Riyadh | 91 | 100 | ஸ. ரியால் |
| 41 | M.R.Ashfak Ahmed | Galle | 90.5 | 2250 | இல.ரூபா |
| 42 | M.I.Khairul Irfaniya | Valachchenai | 90.5 | 2250 | இல.ரூபா |
| 43 | M.F.M.Naleer | Addalachenai-11 | 90.5 | 2250 | இல.ரூபா |
| 44 | Fahidha Nazeer | Ambanbola | 90.5 | 75 | ஸ. ரியால் |
| 45 | Asriya Hasan | Puttalam | 90.5 | 2250 | இல.ரூபா |
| 46 | A.A.M.Haseem | Riyadh | 90.5 | 75 | ஸ. ரியால் |
| 47 | Wellaththambi M. Sameen | Trincomale | 90 | 2250 | இல.ரூபா |
| 48 | Shihana Musadik | Riyadh | 90 | 75 | ஸ. ரியால் |
| 49 | Musfira Nilamdeen | Galle | 90 | 2250 | இல.ரூபா |
| 50 | M.S.Khairul Husna | Matara | 90 | 2250 | இல.ரூபா |
| 51 | M.N.F.Firasa | Galle | 90 | 2250 | இல.ரூபா |
| 52 | M.M.F.Nisrina | Akkaraipattu - 06 | 90 | 2250 | இல.ரூபா |
| 53 | Shajahan M. Abrar | Kandy | 89.5 | 2250 | இல.ரூபா |
| 54 | Thajun Nisa | Riyadh | 89 | 75 | ஸ. ரியால் |
| 55 | Mubina Banu | Riyadh | 89 | 75 | ஸ. ரியால் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **56** | Miskeen M.Hasim | Anuradhapura | **89** | **2250** | **இல.ரூபா** |
| **57** | Ikram Mohamed | Thulhiriya | **89** | **2250** | **இல.ரூபா** |
| **58** | Amjeth Sabran | Sainthamaruthu- 14 | **89** | **2250** | **இல.ரூபா** |

**குறிப்பு:**

வெற்றி பெற்றவர்களின் பரிசுகள் இன்ஷா அல்லாஹ் மிக விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

போட்டிக் குழு சார்பாக

அபூ ஸஃத் முஆஸ்

(தமிழ் தஃவா ஒன்றியம் - ரியாத்)

11.02.1435

வல்ல அல்லாஹ் நேரான வழியில் எம்மை வழிநடாத்தி மறுமையில் உயர்ந்த சுவனத்தை அடையும் உயர் பாக்கியத்தைத் தருவானாக. மார்க்கத்தை அதன் தூய வடிவில் கற்க அருள்புரிவானாக.